**an International CBSE Finger Print School**
**Coimbatore**

# இயல் 4.1: எதனாலே, எதனாலே?

GRADE- V

QUESTION BANK

## அ) வினாக்களுக்கு விடையளி

1. **கோடைக் காலங்களில் எதற்காக இலைகள் உதிர்கின்றன?**

கோடைக் காலங்களில் நீராவிப் போக்கைத் தடுப்பதற்காகத் தாவரங்களிலிருந்து இலைகள் உதிர்கின்றன.

2. **மின்மினிப் பூச்சிகளின் பின்னால் அடிக்கடி விளக்கு எரிவதைப் போல் மின்னுவதற்கான காரணம் யாது?**

மின்மினிப் பூச்சிகளின் பின்னால் அடிக்கடி விளக்கு எரிவதைப் போல் மின்னுகின்றன. காரணம், லூசிஃபெரேஸ் என்சைம் மின்மினிப்பூச்சி பின்னால் இருப்பதால் மின்னுகிறது.

3. **பறவைகள், பறக்கக் காரணம் யாது?**

பறவைகள், பறக்கக் காரணம் அவற்றின் எலும்புகளிலும் இறகுகளிலும் காற்றுப் பைகள் உள்ளன. அவை, பறப்பதற்கு உதவுகின்றன.

4. **மேகம் கறுப்பாகத் தோன்றுவது ஏன்?**

மேகத்தில் அதிக அளவு நீர் இருப்பதால், சூரிய ஒளி ஊடுருவ முடியாது. ஆதலால், மேகம் கறுப்பாகத் தோன்றுகிறது.